இ4/ம.எண்.523/B/2021–2022

சேலம் மாநகராட்சி,

நாள். .06.2022

<u>சேலம் மாநகராட்சி</u>

<u>மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</u>

சேலம் மாநகராட்சி 2021–2022ம் ஆண்டு 15வது மத்திய நிதிகுழு மான்யத்தின் கீழ், அட்டவணையில் கண்டுள்ள பணியை நிறைவேற்ற சேலம் மாநகராட்சி ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலர்களால் **08.07.2022** அன்று பிற்பகல் **3.00** மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணியளவில் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி படிவம் விலை ரூ. | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.54 பகுதியில் தாதகாப்பட்டி மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் பழுது பணிகள், சுற்றுசுவர் உயர்த்தி கட்டுதல், காவலருக்கான கழிப்பிடம் கட்டும் பணி | 45.00 | 45,000 | 9,000 + வரிகள் | 180 நாட்கள் |

1. சேலம் மாநகராட்சியில் பணிகளை மேற்கொள்ள, மாநில மற்றும் அரசு அலுவலகங்களில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், மாநகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை <u>**www.tntender.gov.in**</u> இணையதளம் வழியாக எளிய முறையில் 21.06.2022முதல் 07.07.2022 வரை பி.ப **1.00** மணி வரை இணை இறக்கம் இலவசமாக செய்து கொள்ளலாம்.
3. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை பிணைத்தொகை செலுத்திய விபரத்துடன் இணைத்து சமர்பிக்கப்படவேண்டும், பிணைத் தொகை ஒப்பந்தப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி உத்தரவு பெறப்பட்ட நாள் முதல் ஒரு ஆண்டுக்கு மட்டும் மிகையாகாமல் இருத்தல் வேண்டும்.
4. பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 08.07.2022 மாலை 3.00 மணி வரை ஆணையாளர் சேலம் மாநகராட்சி அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 08.07.2022 அன்று மாலை 3.30 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி குழுவினரால் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
5. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் பொழுது அனைத்து பக்கங்களிலும் ஒப்பந்ததாரர் கையெழுத்திட வேண்டும், ஒப்பந்தப்புள்ளிகளின் தகவல் பெறுதல், சமர்ப்பித்தல், தொழில்நுட்ப தகுதி பற்றிய விவரங்கள் மற்றும் திறப்பதற்கான விவரங்களை <u>**www.tntender.gov.in**</u> என்ற இணையதளத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**<u>நிபந்தனைகள் :</u>**

1. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவோ நிராகரிக்கவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.
2. நிர்வாக காரணங்களுக்காக ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் தேதியினை மாற்றவோ ஒத்தி வைக்கவோ ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.
3. ஒப்பந்தப்புள்ளி தேதி பெறப்படும் நாள் எதிர்பாராதவிதமாக விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அடுத்த வேலை தினத்தில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்.
4. ஒப்பந்தப்பணிகளில் பட்டியல் தொகை பெறுவதற்கு ஒப்பந்தப்பணிகளில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களின் தொழிலாளர் வைப்புநிதி செலுத்தியமைக்கான ஆதார ஆவணங்கள் இணைத்து சமர்பிக்கப்பட வேண்டும்.
5. ஒப்பந்தப்பணிகள் மேற்கொள்ளும் போது ஒப்பந்த தொழிலாளர்கள் உரிய பாதுகாப்பு உபகரணங்கள் பயன்படுத்திட வேண்டும், ஒப்பந்தப்பணிகள் மேற்கொள்ளும் பொழுது விபத்து ஏற்பட்டால் அதற்கு முழு பொறுப்பும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.
6. ஒப்பந்தப்பணிகள் அனைத்தும் ஒப்பந்தவிதிகளின்படி முழு அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
7. அபராதம் விதிக்கப்படும் பணிகளில் தொடர் முன்னேற்றம் இல்லாதிருந்தால் வேலை உத்தரவு இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8. மாநகராட்சி பொறியாளரால் பணியின் தரம் குறைவாக கண்டறியப்பட்டால் அதற்கான பட்டியல் வழங்கப்படமாட்டாது. நிதி இழப்புக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார் அறிவுரையின்படி பணிகள் செய்து முடிக்க முழு ஒத்துழைப்பு தரப்பட வேண்டும்.
9. ஏற்பளிப்பு உத்திரவு கிடைக்கப் பெற்ற 3 தினங்களுக்குள் ரூ.100/– மதிப்புள்ள முத்திரை தாளில் பணிக்கான ஒப்பந்தப் பத்திரம் எழுதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
10. ஒப்பந்தப்புள்ளி பதிவு அல்லது நடப்பில் புதுப்பித்ததை நகல் சமர்பிக்கப்பட வேண்டும்.

ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி.

**பெறுதல்:–**
அனைத்து ஒப்பந்ததாரர்கள், விளம்பர பலகைகள்,
சேலம் மாநகராட்சி.

நகல்:
1. சம்பந்தப்பட்ட இளநிலை / உதவி பொறியாளர்,
2. சம்பந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர்,
3. செயற் பொறியாளர், சேலம் மாநகராட்சி
4. மாநகர பொறியாளர், சேலம் மாநகராட்சி,
5. ஆணையர் அவர்களின் பார்வைக்கு